மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில், அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் வாயிலாக ஏற்கெனவே இயக்கப்படும் 212 பேருந்துகளில் உள்ள இருக்கைகளில் சராசரியாக 47.83% பயணிகள் மட்டுமே பயணம் செய்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனினும், பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கின்றபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 172, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

172—

ஆவின் பாலகம்

***35146—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, காட்டுமன்னார்கோவில் பேரூராட்சி பேருந்து நிலையத்தில் ஆவின் பாலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2014 ஜூலை 17]

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதி, காட்டுமன்னார்கோவில் பேரூராட்சி பேருந்து நிலையத்தில் ஆவின் விற்பனை நிலையம் அமைக்க முகவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தகுதியுள்ள நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, காட்டுமன்னார்கோவில் பேரூராட்சி பேருந்து நிலையத்தில் ஆவின் விற்பனை நிலையம் அமைக்கத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடலேறு மொழித் தமிழாய், இன்பக் கடலேறு தனித் தமிழாய், சோலை மடலேறு சுவைத் தமிழாய், நம் உடலேறி, உயிரேறி, தமிழக மக்களின் இதயங்களில் தங்க சிம்மாசனம் போட்டு அமர்ந்து, (மேசையைத் தட்டும் ஒலி) தன்னந்தனியாக நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் நின்று, தனியொரு சிங்கமாய், தமிழினத்தின் ஒட்டுமொத்த அங்கமாய், 37 பாராளுமன்றத் தொகுதிகளில் வென்று, வெற்றி நடை போடுகின்ற கழகப் பொதுச் செயலாளர், மாட்சிமைகள்தாங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொன்மலர்ப் பாதங்களைப் பணிவோடு வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதி, காட்டுமன்னார்கோவில் பேரூராட்சி பேருந்து நிலையத்தில் ஆவின் பாலகம் அமைத்துத் தருவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாகவும், என் தொகுதி மக்கள் சார்பாகவும் நெஞ்சம் நிறைந்த நன்றியினைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும், மறையாமல் நம் நெஞ்சங்களில் எல்லாம் நிறைந்து நிற்கும் கழக நிறுவனர், முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் உருவாக்கப்பட்ட சேத்தியாதோப்பு பால் குளிரூட்டும் நிலையத்திலுள்ள பழைய இயந்திரங்களை மாற்றிடவும், நவீன இயந்திரங்களை நிறுவிடவும், சுற்றுச் சுவர் அமைத்து, புனரமைத்துத் தருவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல சேத்தியாதோப்பு பகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் இயங்கி வருகிறது. அதை மேலும் விரிவுபடுத்துவது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சங்கினால் பால் கொடுத்தால் சந்தன வாய் நோகுமென்று, நொங்கினால் பால் கொடுத்து' தமிழ் வளர்த்த தமிழகத்தில், பால் வளத் துறையில் இரண்டாம் வெண்மைப் புரட்சிக்கு வித்திட்ட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொன்மலர்ப் பாதங்களைப் பணிவோடு வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிதியாண்டிலேயே சேத்தியாதோப்பு பால் குளிரூட்டும் நிலையத்திற்கு இயந்திரங்களை மாற்றியும், சுற்றுச்சுவர் அமைத்துத் தருவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

2014 ஜூலை 17]

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்தப் பகுதியிலே தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், சேத்தியாதோப்பு பால் குளிரூட்டும் நிலையத்திற்குத் தேவையான இயந்திரங்களை 1 கோடியே 9 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யவும், ஒன்றியத்தினுடைய சொந்த நிதியாதாரத் திட்டத்தின்மூலம் அந்தப் பகுதியை விரிவாக்கம் செய்வதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியை மேலும் விரிவாக்கம் செய்வதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவின் பாலகக் கடைகளில் ஆவின் பாலகப் பொருட்கள் மட்டுமல்லாமல், சிற்றுண்டிகள், மளிகைக் கடை போன்று வெற்றிலைப் பாக்கு உட்பட பல்வேறு வகையான பொருட்கள் விற்கப்படுகின்றன. இதுகுறித்து மதிப்பீட்டுக் குழு ஆய்வின்போது, "இப்படி விற்பதற்கு அனுமதியில்லை, ஆவின் பாலகப் பொருட்கள் மட்டுமே விற்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது" என்று அதிகாரிகள் தெரிவித்தார்கள். ஆனால், திண்டுக்கல் மாவட்டத்தில் இன்னும் ஆவின் பாலகக் கடைகளில் பலவகையான பொருட்களை விற்பனை செய்துகொண்டிருக்கிறார்கள். இதை ஒழுங்குபடுத்தி, முறைப்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற குற்றச்சாட்டுகள் வருகின்றபொழுது, எந்த ஆவின் பார்லரில் முறைகேடாக வேறு பொருட்கள் விற்பனை செய்யப்படுகிறதோ, அதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்தப் பார்லரை மூடுவதற்கு உத்தரவிடப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த ஆவின் பார்லரை ஆய்வு

செய்து, அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 173, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

173—

குளிர்பதனக் கிடங்கு

***20291—திரு. கே.பி.பி. பாஸ்கர்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல்லில் முட்டைகளைப் பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நாமக்கல்லில் உற்பத்தியாகும் முட்டைகளைப் பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு முன்வருமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். தமிழ்நாடு அரசின் வேளாண்மை விற்பனை மையத்தின் மூலமாக, நாமக்கல் மாவட்டத்திலே பரமத்திவேலூர், உஞ்சனை மற்றும் நாமகிரிப்பேட்டை ஆகிய இடங்களிலே குளிர்பதனக் கிடங்குகள் அமைக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கரங்களாலே கடந்த 27—6—2014 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளன. அக்கிடங்குகளிலே முட்டைகளைப் பாதுகாப்பாகக் குளிர்பதன நிலையில் சேமித்து வைத்துப் பயன்பெறலாம். எனவே, நாமக்கல்லில் தனியாகக் குளிர்பதனக் கிடங்கு அமைக்க தற்போது அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், N.E.C.C.-National Egg Co-ordination Committee *மூலமாக 12,000 டன் கொள்ளளவுக் கொண்ட முட்டை சேமிப்புக் கிடங்கு ஒன்றும் நாமக்கல் மாவட்டம், ரெட்டிப்புதூரில் கட்டி*